1990 ஆகஸ்ட் 23] [திரு. துரைமுருகன்]

விட்டார். ஆனால் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு மணி அவர்கள் என்னை இரண்டு நாட்களாக 'பிரைய்ன் வாஷ்' செய்து கொண்டிருக்கிறார். காரணம் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர்ப் போய்ச் சேரவேண்டுமென்பதாலே. ஆனால் எல்லா நேரத்திலும் 'டர்ன் சிஸ்டம்' என்பதை முழுக்க எடுத்துவிட முடியாது. இன்றைக்கு இருக்கிற நிலைமை, நேற்றைய தண்ணீர் வரத்தை விட குறைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் மணி அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றைச் செய்யலாம்.

எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில்—சேடை நாற்று என்பார்கள்—அதுவரையில் வேண்டுமானால் 'டர்ன் சிஸ்டத்'தைக் கொஞ்சம் ஒத்தி வைக்கலாம். அதற்கே என்ன ஆகுமென்றால், 1 டி.எம்.சி. எடுக்கிறவர்கள், ஒன்றேகால் டி.எம்.சி. எடுக்கவேண்டும். 18,000 கியூசெக்சுக்குப் போகவேண்டும், உறுப்பினர் சொன்னாரே ரொம்ப தைரியம் என்று, அந்த தைரியத்தின் அடிப்படையில்தான் இந்த மன்றத்திலே இதை அறிவிக்கிறேன். எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில், 'டர்ன் சிஸ்டம்' இருக்காது. போய்ச் சேர்ந்த மறுநிமிடமே 'டர்ன் சிஸ்டம்' அமல்படுத்தப்படும்.

10-45 மணி

4. விதி 110-இன்கீழ் செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 110-வது விதியின்கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் மறு நிர்ணயம் செய்வது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வரதராசன் மற்றும் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருந்தனர். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் 2—5—1990 அன்று இப்பேரவை முன் அறிக்கை ஒன்றை வைத்தேன். அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தின்போது குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்க இரண்டு முறைகள் உள்ளன என்றும், ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய விகிதத்தை திருத்தியமைப்பது என்பது ஒரு முறை. திருத்தியமைக்கப்பட இருக்கும் ஊதிய விகிதங்களைக் குறித்து

ஒரு முதல் நிலை அறிக்கை வெளியிட்டு அது குறித்து ஆலோசனைகளைப் பெற்று அவற்றைப் பரிசீலித்து அதன் பின் முதல் நிலை அறிக்கையை முடிவு செய்வது என்பது மற்றொரு முறை. அதாவது அறிவிப்பு முறை என்றும் குறிப்பிட்டேன். தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்கக் குழு அமைத்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க காலதாமதம் ஆகும் என்பதால் ஊதிய விகிதங்களை அறிக்கை முறையில் திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று குறிப்பிட்டேன்.

அந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்க ஒரு முதல்நிலை அறிக்கை வெளியிடும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் நான் கோவில்பட்டி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழில்களைச் சார்ந்த தொழில் அதிபர்கள் என்னைச் சந்தித்து மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமான ஊதிய விகிதங்களும் அகவிலைப் படி விகிதங்களும் உள்ளன என்று முறையிட்டனர். அவர்கள் கொடுத்த மனுவை தொழிலாளர் நல ஆணையாளரிடம் தந்து இதைப்பற்றி விசாரிக்க சொன்னபோது, அவரும் அங்கே இருக்கின்ற தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் அதுபற்றி ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக அறிந்தேன். நேற்றைக்கு நான் இதை உரிமை மீறல் பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் இங்கே எழுப்பப் போகிறேன் என்று சொன்னபோது, இல்லை, ஏற்கெனவே தங்களிடம் சொன்னது போல அறிக்கை முறையிலேயே ஊதிய விகிதம் நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை அவரிடம் சொன்னேன். அவரும் இதுபோல ஓர் அறிக்கையை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் ஆணையாளர் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தக் கடிதம் ஒரு தொழில் குழுவை ஏற்படுத்தி, அதில் இருக்கின்ற சங்கடங்களை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் அது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு விரைவில் தீப்பெட்டி தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

காமராசர் மாவட்டத்திற்கென்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப் படாததால் அப்பகுதி மக்களின் நிலை குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராசர் மாவட்டத்திற்கு என்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாததால் அப்பகுதி மக்களின்